NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 08 | தமிழ் மொழியும் இலக்கியமும் | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ......................  புள்ளிகள்

## பகுதி – I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. வியாபாரி சகல ஐசுவர்யங்களுடனும் வாழ்ந்தார். இதில் ஐசுவரியம் என்பது
   1. துன்பம் 2. பாதுகாப்பு 3. செல்வம் 4. கொடை

2. வறுமையால் வாடிய புலவர் குமண வள்ளலைக் காணச் சென்றார். வறுமை என்புதன் ஒத்த பொருள்
   1. இன்னல் 2. துன்பம் 3. சந்தோஷம் 4. நல்குரவு

3. போனாலும் ஒரு தம்பி; போனவனும் தான் வரும் அவதி போயிற்று என்னா. இங்கு அவதி என்பது
   1. விரும்புதல் 2. துன்பம் 3. இன்பம் 4. வறுமை

4. அ.்.றிணை பலவின்பால் பன்மைச் சொல்
   1. ஆடுகள் 2. ஆடு 3. அது 4. குதிரை

5. வடமொழி கலப்பினால் தமிழில் புகுந்த எழுத்துக் கொண்ட சொல்
   1. பழம் 2. வானம் 3. பட்சி 4. சஷ்டி

6. இடையின மெய் எழுத்துக்களைக் கொண்ட தொகுதி
   1. ய், ர், வ் 2. க், ய், ண் 3. ஞ், ண், ன் 4. க், ச், ட்

7. இராமனைப் பார்க்கிலும் கண்ணன் அறிவாளி. இவ்வாக்கியத்தில் சொல்லுருபு இடம்பெறும் வேற்றுமை
   1. இரண்டாம் வேற்றுமை 2. மூன்றாம் வேற்றுமை
   3. ஐந்தாம் வேற்றுமை 4. நான்காம் வேற்றுமை

8. அவன் தனது புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவேற்றினான். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள கலைச் சொல்லுக்குரிய தமிழ் வடிவம்
   1. புகைப்படம் 2. முகப்புத்தகம் 3. கணினி 4. கைத்தொலைபேசி

9. படிக்கிறான், சிரிப்பான் எனும் சொற்களின் இடைநிலைகளைக் குறிக்கும் முறையான எழுத்து
   1. கிறு, வ் 2. கின்று, ப் 3. கிறு, ப் 4. கின்று, ப்

10. தாகத்தால் வருந்தியவர்கள் ……………….. சென்று நீர் அருந்தினார்கள்
    1. சுனை 2. சுணை 3. மலர் 4. பானம்

11. பெயர்ச்சொல்லின் சிறப்பிலக்கணமாய் அமைவது
    1. வேற்றுமையேற்றல் 2. காலம் காட்டல்
    3. செயலை உணர்த்தல் 4. சொற்றொடராக வருதல்

12. வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.
    1. அப்பு 2. நீர் 3. திரவம் 4. சலம்

13. பின்வருவனவற்றுள் எச்சமாகவும் முற்றாகவும் வரும் சொல்
1. கண்ட 2. வந்தான் 3. கடித்தல் 4. கடிக்கும்

14. அறியாமை இருள் அழிக. என்பது
1. வாழ்த்தல் 2. விதித்தல் 3. வைத்தல் 4. வேண்டல்

15. கன்னலும் பூகமும் நெடிது வளர்ந்தன. இங்கு கன்னல், பூகம் என்பன குறிப்பது முறையே
1. பாக்கு மரம், கரும்பு 2. கமுகு, வேம்பு
3. கரும்பு, கமுகு 4. வேம்பு, கரும்பு

16. கேடு விளைந்த பின்னர் அதனைத் தடுக்க முயல்வது பயனில்லாத செயலாகும் என்பதை உணர்த்தும் பழமொழி
1. கண்கட்ட பின்னர் சூரிய நமஸ்காரமா? 2. ஊர் வாயை மூடு இல்லை
3. பாடை ஏறினும் ஏடது கைவிடேல் 4. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா ?

17. எண்பதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா
1. பவள விழா 2. பொன் விழா 3. வெள்ளி விழா 4. அமுதவிழா

18. நிலத்தின் உடைமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றாக எழுத்து வடிவில் அமைந்த ஆவணம்
1. பேப்பர் 2. நகல் 3. உறுதி 4. பத்திரம்

19. தேனியும் குழவியும் என்னும் பாடல் இடம்பெறுவது
1. மலரும் மாலையும் 2. இளைஞர் விருந்து
3. உமர் கயாம் பாடல்கள் 4. வாழும் வள்ளுவம்

20. பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச் சொல்லாக அமைவது
1. கந்தோர் 2. அலுமாரி 3. யன்னர் 4. கதிரை

(20ஒ2ஸ்ரீ40 புள்ளிகள்)

---

-

## பகுதி II

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
1. நாட்டார் பாடல்களின் சிறப்புகள்
2. நான் ஒரு பறவையானால்
3. வாசிப்பின் முக்கியத்துவம்
4. உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்
5. நீரின் பயன்கள்

(20 புள்ளிகள்)

02. நல்ல நூல்களை வாசிப்பதனால் கிடைக்கும் பயன்களைப் பற்றி கூறி உமது நண்பன் அல்லது நண்பிக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பின்வரும் வினாக்களுக்கு பாடநூலை ஆதாரமாகக் கொண்டு விடை தருக.

1. தமிழ் மொழிக்கு சிறப்பானதொரு எழுத்தாகவும் மூன்று புள்ளி வடிவமுடையதுமான எழுத்து எது?
2. பவளத்தின் செயல்களாக கிளியினால் கூறப்படுவன எவை ?
3. பரதனின் ஆணையைக் கேட்ட சத்துருக்கனின் நிலை கட்டுரையில் எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது ?
4. வாழ்வதற்காக வாசி எனும் தலைப்புடைய கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது?

5. இடைநிலைகளின் தொழிற்பாடு யாது ? நிகழ்கால இடைநிலைகள் எவை?
6. சிந்தாதேவியால் ஆபுத்திரனுக்கு வழங்கப்பட்ட திருவோட்டின் சிறப்பு யாது ?
7. கீரையை எமது உணவிலே அதிகளவு சேர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் யாது ?
8. விகாரப் புணர்ச்சியின் வகைகளைத் தருக.
9. குமணன் செல்வம் நிலையில்லாதது என்பதற்கு கூறிய உவமானம் எது?
10. ஆறு + சுவை> பொன் + காப்பு எனும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(20 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுவதோடு புணர்ச்சியில் தோன்றும் உடம்படுமெய் மெய்யினையும் எழுதுக.

1. பூ + அழகு =
2. பனி + இரவு =
3. பல + உயிர் =
4. கலை + இன்பம் =
5. திரு + அடி =

(10 புள்ளிகள்)